# தனியார் பனங்காணிகளை பதிவு செய்தல்
# பனை அபிவிருத்திச்சபை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1975ஆம் ஆண்டு 24ஆம் இல தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி திருத்தச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் (1) பனை அபிவிருத்திச்சபைக்கென குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத்தத்துவத்திற்கமைய பனைப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் பனை வள பயன்பாட்டை மேம்படுத்தல் போன்ற நோக்குடன் தனியார் பனங்காணிகள் பதிவு செய்யப்பட உள்ளது.

**பதிவு செய்வதன் அனுகூலங்கள்:**

- ✓ பனந்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் மூலப்பொருட்களை சரியான முறையில் பயன்படுத்தி வருமானம் ஈட்டக்கூடிய வழிகள் தொடர்பான ஆலோசனைகள் / பயிற்சிகள்
- ✓ உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
- ✓ உற்பத்தியாளர்களை / பயிர் செய்கையாளர்களை இனங்கண்டு கொள்ளல்
- ✓ பனந்தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி சாத்தியமான தீர்வுகளை எட்டுதல்
- ✓ பாவனையின்றி இருக்கும் பனை வளத்தினை உற்பத்திதிறனுடையதாக மாற்றுவதுடன் அதனுடனிணைந்து மக்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்தல்

பதிவு செய்ய விரும்புபவர்கள் பனை அபிவிருத்திச்சபையின் மாவட்ட அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தி /------------------------------------ இணைய முகவரியினூடாக தரவிறக்கம் செய்து நேரிலோ / தபாலிலோ பனை அபிவிருத்திச் சபையின் அந்தந்த மாவட்ட முகாமையாளர்களுக்கு / **முகாமையாளர் (அபிவிருத்தி) பனை அபிவிருத்திச்சபை, ஏ9 வீதி, நாவற்குழி, கைதடி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்து பதிவு செய்து கொள்ளமுடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பனை அபிவிருத்திச்சபை அபிவிருத்திப் பிரிவுடன் தொடர்பு கொள்ள முடியும்.

(தொடர்புகளுக்கு – 021 222 2034)

**தலைவர்**
**பனை அபிவிருத்திச் சபை**